(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) இம்ம நிலத்தில் பழங்குடி மக்கள் நலன் குறித்து அந்த ஆய்வுக் குழு வவாதங்கள் நடத்தியது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பழங்குடி மக்கள் மேம்பாட்டுக்கு இந்த அரசிடம் என்ன சிறப்புத திட்டங்கள் இருக்கின்றன ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : முதலில் கேட்கப் பட்ட கேள்வி வேறு. போடப்பட்ட துணைக் கேள்வி வேறு. இதற்குத் தனி யாக கேள்வி போடவும்.

Midget railway in Madras Zoo

* 141 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is proposed to introduce a midget railway for children inside the zoo;

(*b*) if so, the details thereof; and

(*c*) the other improvements that are being proposed for the zoo?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) 10 தொடர் வண்டிகளையும் ஒரு டீசல் எஞ்சினையும் கொண்டதும் 60 இளஞ்சிறுர்களை ஏற்றிச் செல்லத்தக்கதுமான ஒரு சிறிய இரயில் வண் டிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதை அமைத்துப் பேணி வருவ தற்கென மொத்தம் ரூ. 4,30,000 செலவாகும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

(உ) மேற்கொண்டும் கீழ்க்கண்ட மேம்பாடுகளை மிருக காட்சி சாலையில் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது :—

(1) சிறிய இரயில் செல்கிற வழி நெடுகவுள்ள கூண்டுகளின் முகப்புப் பகுதிகளை மாற்றியமைத்தல் ;

(2) சிறிய இரயிலில் செல்கிற இளஞ்சிறுர்கள் வேடிக்கை காண் பதற்கான சிற்பக்கலை வேலைப்பாடுகளுக்கு அழகூட்டுதல் ;

(3) சில பாலூட்டி விலங்குகளையும், பறவைகளையும், கூடுதலாக வாங்குதல்; இவற்றைத் தருவிக்க ஏற்கனவே ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட மேம்பாடுகளைச் செய்ய ரூ. 25,700 செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

THIRU K. VINAYAKAM : Is it not a fact that there was a complaint from the authorities of the Zoo that the animals become allergic when they hear the noisy sound created by the railway that passes nearby and that there was a proposal to shift the entire zoo to the Raj Bhavan campus by acquiring some land? What happened to the proposal? Did not the Corporation put up some such proposal and is the Government not willing to accord sanction to the proposal?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அங்குள்ள விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் அதிர்ச்சி ஏற்படுவதாகத் தகவல் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு எந்தப் பறவையாவது அத்தகைய குறிப்பை அனுப்பி இருந்தால் அதை மன்றத்திற்குக் கொடுத்தால் சிறப்பாக இருக்கும். அந்த மிருகக் காட்சி சாலையை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கான செயற்குறிப்பு எதுவும் இல்லை.

திரு. டி. மார்டின்: இந்த விலங்கு காட்சி சாலைக்கு பள்ளிகளில் இருந்து நிர்வாகத்தினர் பொறுப்பில் மாணவர்கள் எல்லோரும் ஒட்டு மொத்தமாகச் செல்லுகின்ற நேரத்தில் அவர்களுக்கு கட்டணம் வாங்காது உள்ளே அனுமதிக்கும் திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அது பற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. மு. ச. சிவசாமி: சிறுவர் ரயில் வண்டித் திட்டம் இப்போது அங்கு அமலுக்கு வந்து ஓடிக் கொண்டிருக்கிறதா ? இல்லையென்றால் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: நம்முடைய பெருமைக்குரிய மறைந்த முதலமைச்சர் அண்ணா அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டு, தற்போதைய முதலமைச்சர் அவர்களால் 22—10—1968-ம் தேதியன்று துவக்கி வைக்கப்பட்டது.

Mahamanam at Kumbakonam

* 142 Q.—Thiru N. Kasiraman: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government have sanctioned a sum of nearly Rs. 6 lakhs for the formation of a ring road around Kumbakonam in connection with the Mahamaham festival held in the month of February 1968;

(*b*) whether the amount was sanctioned as a grant to the respective panchayats in which the roads are formed or as a loan or as subsidy; and

(*c*) whether a sum of Rs. 2 lakhs was sanctioned as a loan to the Kumbakonam Municipality in connection with the festival?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) 1968 பெப்ரவரித் திங்களில் நடைபெற்ற மகாமகம் திருவிழா குறித்து கும்பகோணத்தைச் சுற்றிலும் வட்டச் சாலைகள் அமைப்பதற்காக இப்போது செயல்படாத தஞ்சாவூர் மாவட்ட வாரியத்தில் உள்ள ரொக்க இருப்பிலிருந்து தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் ரூ. 5 லட்சம் பயன்படுத்திக்கொள்ள அரசாங்கம் அனுமதித்தது.

(இ) இவ் வினா எழவில்லை.

(உ) மகாமகம் திருவிழா குறித்து மாநில நிதிகளிலிருந்து கும்பகோணம் நகராட்சி மன்றத்திற்கு ரூ. 74,855 கடனும், திருப்பித் தரத்தக்க முன் பணம் ரூ. 2 லட்சமும் வழங்கப்பட்டன.

திரு. நா. காசிராமன்: இரண்டு லட்சம் ரூபாய் இந்த விழாச் செலவிற்காக கடனாக வழங்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கிட்டத்தட்ட $1\frac{1}{2}$ லட்சம் ரூபாய் திருப்பித் தரப்பட்டு விட்டது. மீதம் உள்ள தொகையை—எகப்பட்ட செலவு ஆகிவிட்டபடியால்—நகராட்சிக்குத் தள்ளிக் கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?